**Starting time 11.50 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.108/2004**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 14.06.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிகண்டன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:** வா.சா.ஆ.4 ஆவணம் பிரதிவாதி எனக்கு எழுதிக் கொடுத்த அடமானக்கடன் பத்திரம் என்றால், ஆமாம். அதனை பிரதிவாதியும், அவருடைய மகள் பெரியம்மாளும் எழுதிக் கொடுத்துள்ளனர் என்றால், ஆமாம். வா.சா.ஆ-4 ல் முதல் பக்கத்தில் பெரியம்மாளுக்கு பிதுராஜ்யமாக பாத்தியப்பட்டு எங்களது அனுபவ சுவாதீனத்தில் இருந்து வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம்.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தை பெரியம்மாள் எழுதிக் கொடுக்கவில்லை என்றால், ஆமாம். இந்த வழக்கிலும் பெரியம்மாள் தரப்பினர் அல்ல என்றால், ஆமாம். வா.சா.ஆ.4 ல் நான் சாட்சி இல்லை என்றால், ஆமாம். வா.சா.ஆ.1 லும் நான் சாட்சி இல்லை என்றால், ஆமாம். வா.சா.ஆ.9 ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மறுத்து நான் பதிலறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால், ஆமாம். பதிலறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் சரியானவை என்பதால் தான் அதை மறுத்து எனது தகப்பனார் பதில் எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல.

அதுபற்றி எனது தகப்பனாருக்கு தான் தெரியும்.

3. வா.சா.ஆ.4 மற்றும் 1 ஏற்படுத்தப்பட்டது குறித்து எனக்கு தெரியும் என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால், ஆமாம். அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 11.57 P.M

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**